

3/459

# வைகை

(கவிதைத் தொகுதி)

வை. க. தவமணிதாசன்

பாரதி பதிப்பகம்
யாழ்ப்பாணம்.
1994

Title: VAIKAI

Author: V. K, THAVAMANITHASAN

Language: TAMIL

Edition: 1994, May.

Copyright: AUTHOR

Size: 1/8 Demy (21.5 cm, 14 cm)

Page: VIII + 64

Printers And Publishers: BHARATHY PATHIPPAKAM
430, K. K. S. Road, JAFFNA.

Price: Rs: 100.00

# என்னுரை

'வைகை' எந்தனுக்கு வாடிக்கை யானதற்கு
வை.க. முறையே என்றன் தலையும் தலையெழுத்தும் ஆகும்
வைகையாலே வழக்குவரும் நம்பிக்கை.
வைகை வழிதவறும் வகையினர்க்கு வழி செய்யும்
வைகைக் கவியாற்றால் வையத்தை வாழவைத்து
உய்விக்கவே உதித்ததிந்தப் பாத்தொகுதி
வைகையை ஆற்றுப்படுத்தி ஆதரவு தந்து அணைத்து

உய்கை உனது என உரமூட்டி மெய்யாய் மெச்சி
அச்சா! என உச்சிகுளிர உறுதுணையாய் உடன்
அச்சுவாகன மேற்ற ஆவன செய முன்னுரைத்த
அச்சமிலான் கல்வியிலே எத்துறையும் தொடாததில்லலக்குரு
சச்சிதானந்தன் எந்தன் தலை தாள் பணிந்தேன் நன்றி

வைகை வறண்ட நிலத்திற்கும் வாழ்வுதர கை
வைத்துத் திருத்தித் திருப்பிக் களனியெல்லாம் செழிக்க
உய்விக்க உதவி இவன் பற்றி(ல்) எழுதி ஊக்கம் தந்து
உரமாய்க் கவியரங்கில் ஊக்கியாய் நின்று
நெய்விட்டு நீட்டித் திரிதூண்டிப் பயம் போக்கி என்னை
படி கவிதை என வளர்த்த கலாநிதி காரை செ சுந்தரனார்
கைதந்து 'அபயம் காட்டிய வைகைப் பிரானாக வந்திங்கு
மெய் வருத்தம் பாரா துழைத்த உத்தமனார்க்கென் நன்றி

வெயிற்கோ மழைக்கோ எனக்கு ஒதுங்கப்
பயனற்றுப்போன பல்கலைக் கழகம் தாயின்
கருப்பை கவிப்பேராசான் எந்தைக் கவிக்கரு என்னுள்
பையவே வளர்த்தெடுக்கப் பாடுபட்ட பெற்றோ[illegible]
அட்டைப் படத்தை அழகுற வரைந்து பார்த்தோர்
அகலத்திறந்த வாய் அப்படியே இருக்கப்பதிந்த
கட்டழகால் வாய்த்த ஓவியர் ரமணி கை
கலையாற்றலுக்கும் நன்றிக் கடன் தீர்த்தல் நயப்பு
வாழைத் தண்டில் 'அவன்' வாய்புதைக்க அக்குறியை
ஏழைமறைத்துப் பணம் எண்ணி எண்ணிப் பாப்பதெனப்
போயினளாம் பெண்ணொருத்தி போலவும் யான்
காலம் கனியும் எனக் கால் நூற்றாண்டாக
ஞாலத்தில் என்றன் நலிவுநிலை கண்டறிந்த
சங்கரனார் மனமுவந்து 'சரி செய்வோம்' வைகையென
இங்கிதமாய் அச்சில் எழில்செய் வாண்மைக்கும் நன்றி - இச்
சங்கதிக்குத் துணைநின்ற நண்பருக்கும் நன்றி வணக்கம்.

29/5, தேவாலய ஒழுங்கை,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.
1994-05-20

வை. க. தவமணிதாசன்

# முன்னுரை

*கவிதையில், புதுக்கவிதை, மரபுக்கவிதையென இருவகையுண்டென்று கூறிக்கொள்ளுகிறார்கள். கவிதை ஓசையிலிருந்து பிறப்பது. அந்த ஓசைக்கு ஒரு கோலம் உண்டு அந்தக் கோலங்கள் மீண்டும் மீண்டும் வரும்போது ஒரு 'இலயம்' உண்டாகிறது. எண்ணங்களை ஏற்றிய சொற்களோடு இந்த இலயம் ஒருங்கிசையும் போது ஒரு மந்திர சத்திபிறக்கிறது. இம்மந்திரசத்திதான் கவிதையை ஒரு உன்னத சிகரத்துக்குக் கொண்டு போகிறது.*

கவிதைக்குப் பொருள் தேடிப்பிடித்து வருவதொன்றன்று. புலவனைச் சுற்றியுள்ள உலகில் அவனைத்தாக்கும் அனுபவங்களிலிருந்து கவிதைப்பொருள் உருவாகிறது. நமது இளைஞர்கள் கவிபாடத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தம் உணர்வுகளையும் எண்ணங்களையும் சொல்லிலே வடிக்கும்போது, தங்கள் முயற்சியிலே எவ்வளவு தூரம் வெற்றியடைகிறார்கள் என்பது ஒரு பெரிய கேள்வி.

இந்தத்தொகுப்பு அத்தகைய இளைஞனின் உணர்வுகளையும் எண்ணங்களையும் தாங்கிநிற்கின்றது. மேலோட்டமான ஒரு ஓசை எல்லாக் கவிதைகளிலும் பொருளோடு இழைந்து செல்கின்றது. கவிஞன் ஒரு விஞ்ஞானியாதலால் விஞ்ஞானக் கருத்துகள் கவிதைத் தொகுப்பு முழுவதிலும் அங்கங்கே காணப்படுகின்றன. கண்டல்வேரின் புரட்சிகரமான போக்கினை அருமையான கவிதையாக்கியுள்ளார். சமூக முன்னேற்றங்கருதிய பல கவிதைகள் புதிய உருவங்கள் பெற்றுப் பொலிவடைந்துள்ளன. வாழ்க்கையின் பல பிரச்சனைகளைக் கவிதையின் கருப்பொருளாகக் கொண்ட கவிதைகள் புதிய கோணங்களில் முன் பார்க்காத வடிவங்களைக் காட்டுகின்றன. இந்தக் கவிதையிலேயமைந்த முக்கியமான ஒரு பண்பு. தேவையற்ற அடைமொழிகள் கவிதையைப் பாரப்படுத்தாமையே. சத்தத்துக்காகவும் [illegible] துகைக்காகவும் சில வேண்டப்படாத அடைமொழிகளைப்புகுத்தி கவிதை கூறமுனையும் நோடி அனுபங்களை மழுப்பிவிடுகிறார்கள். ஆனால், இந்தக்கவிஞன் வேண்டப்படாத அடைகளைச் சேர்க்காமையால், உணர்வுகள் நேரடியாகவே பிரதிபலிக்கப்படுகின்றன. அடுத்ததாக, சொற்போகும் போக்கிலே கவிஞன் போய், கட்டுப்பாடிழந்து தவிக்காமல், பொருளின் வெளிப்பாட்டை முக்கியமாகக் கருதி, அதன்வழியே சொற்களை சேவைபுரியச் செய்கிறான்.

இக்கவிதைத் தொகுதியில் விஞ்ஞானக் கருத்துக்களை உட்பொருளாகக் கொண்ட நல்ல கவிதைகள் உள்ளன. கருத்து மாத்திரம் விஞ்ஞானமாக அமைந்து விட்டால் மாத்திரம் கவிதை சிறக்காது. அதனை வெளிப்படுத்தும் முறை ஒரு புதிய படைப்பாக வேண்டும். எயிட்ஸ் நோயைப்பற்றி ஒரு போர்க்கல நிலையை வைத்துக் கவிதை செய்துள்ளார். ஔவையார் அணுக்கொள்கை ஒரு புதிய நோக்கிலமைந்த கவிதை. விஞ்ஞான முன்னேற்றத்தினால் இடத்தைவென்று ஏனைய கோள்களிலும் கால்வைப்பான் மனிதன் என்றதை இனிவரப்போகும் மனித வாழ்வைக் கற்பனைக் கண்ணால் கண்டு அழகாக வருணித்துள்

ளார். வெண்கருட்டினால் வரும் தீமையைக் குறிப்பாகச் சொல்லி ஆழத்திற் பதிய வைக்கிறார். மதுவின் கெடுதியை மனிதமனம் உணரு மாறு வருணித்துள்ளார்.

சமூக சமத்துவம் சரியாகச் செயல்படுமிடத்தை அவர் எடுத்துச் சொல்வதிலே ஒரு புதிய கவிதையமைப்பை வடித்துள்ளார். ''சமத்து வத்தைப் பிளாவினிலே வளர்த்தாய் வாழி'' என்னும் அடிகள் அந்தக் கருத்தை உளத்திலே ஆழ ஊன்றி விதைக்கிறது. 1974 மாசியில் எழு திய அசல் அரிசி, நாம்பட்ட உணவுப் பஞ்சத்தை நினைவூட்டுகிறது. பாவலர்க்கேன் இக்கெதியோ என்பதில் பழைய சத்திமுற்றப்புலவர் கையது கொண்டு மெய்யது பொத்திக்காலது கொண்டு மேலது தழீஇ என்று கிடந்த காட்சியையும், இந்நாட் காட்சியையும் இணைத்து புலவருக்கு வறுமையோர் நீங்காத பண்பென நினைக்கச் செய்கிறார். தபால் காரன் என்பது குழந்தைகளுக்கும், குமரர்களுக்கும், குடும்பத்தினருக் கும் ஏற்ற கவிதையாம். நமது மண்ணுக்குக் குறியீடாக உள்ளது பனையென்னும் கற்பகதரு. அது யாழ்ப்பாணக் கிராமவாழ்வை விட்டு நீங்காதது. அதைப்பற்றிக் கூறிக்கவிதைத் தொகுதிக்கு 'மண்வாசனை' ஊட்டும் கவிஞர் பனையே சொல்லிவருந்துவதாக எழுதுவது மனதை நெகிழ்க்கிறது.

> ''குலைகொடுத்தேன் கொடும்பசியைத் தீர்ப்பதற்கு
> இலைகொடுத்தேன் உங்கள் இல்லங்களை வேய்வதற்கு
> என்றெடுத்து என்னை நீர் வெட்டுகிறீர்''

என முடிப்பது மனதைக் கரைக்கிறது.

அவர் தம்முடைய கவிதையைப்பற்றித் தாமே கவிதைக் கன்னியில் வெளிப்படுத்துகிறார்.

> ஆரத் தழுவிட அங்குசென்றேன் — அவள்
> ஆயிரம் உருவத்தில் காட்சிதந்தாள் என்பது

இத்தொகுதியின் பல்வேறு படிவங்களைத்தான் சுட்டுகிறார் போலும்.

கல்வயல் வே. குமாரசாமியின் மரணநினைவுகளில் வரும் கவிதைகளை மீண்டும் மீண்டும் படிக்கும்படி மனம் சொல்லுகிறது. அதன் மறக்கலாகாத் தன்மை, வாழ்க்கையின் நேரடியனுபவங்களை, அலங்காரமற்ற கிராமமக்களின் போக்கில் கூறுவது போற்றப்படுகிறது. இப்பொழுது தவமணிதாசனின் கவிதைகள், விஞ்ஞான சமூகக் கருத்துகளை வீண் அடைமொழிகளின்றிக் கூறுவது ஒரு தனிப்போக்காகத் தோன்றுகிறது.

தன்னாசிரியன், தன்னொடு பயின்றோன், தன்மாணக்கன் என்பாரிடத்து முன்னுரை பெறவேண்டுமென்று பெரியோர் கூறியது மிகவும் பொருத்தமானது. ஒருவரின் ஆசிரியனும் சகமாணவனும், மாணவனும்தான் ஒருவனைப் பற்றிச் சரியாக [illegible] முடியும். ஒருவரின் கல்விப் பெருமையைச் சரியாக அறிபவர்கள் அவர்களே. தவமணிதாசன் இரண்டு வருடங்களுக்கு மேலாக தினமும் வகுப்பறையிலும் வெளியிலும் பழகியவர். அவருடைய வகுப்பறை விடைகள் என்நெஞ்சில் இன்றுமுண்டு. அவைபோல இக்கவிதைகள் என்னுள்ளத்தைக் கவர்கின்றன.

பண்டிதர் க. சச்சிதானந்தன்
M. Phil (Lond) FRAS(Lond)

மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.
1994-05-05

## எம்மூர்...

நாரந்தனை யெனும் நாம மெழுந்ததும்
நல்லவர் நிறை கல்வி செழித்ததும்
பாரா முகங்களின் பசிப்பிணி அழிப்பதும்
பக்குவம் எம்மூரின் பண்பு கொழித்ததே!

காலைக் கதிரவன் கடலிற் குளிப்பதும்
சால உழவுக்குக் காளை வளைவதும்
சோலைக் குயிலுக்குச் சொர்க்கமளிப்பதும்
வேலை எம்மூருக்கு விந்தை புரிவதே!

தேவன் மணிஓசை திருத்தலத் துப்பாசை
ஆவின் குரலோசை அலைந்து வரும்பண்ஓசை
மாவின்பூ வண்டோசை மகிழும்எம் மண்ஆசை
தாவும் மனத்தாசை தாங்கிநிற்கும் எம்மூராசை

நெல்வயல்கள் வரம்புகளால் நெடும் பாதையாக்கும்
நிறைகதிரின் ஓசைகளால் நிசவாழ்வு சேர்க்கும்
சொல்வேறு செயல்வேறாய்ச் சோதனைகள் வாராச்
சுகங்காணும் எம்மூர்மண் மடிமீது தவழின்.

பனை தென்னஞ் சோலைகளைப் போர்வையாக்கும்
பாலை கயல் ஒட்டி ஓரா பாய்ந்து விளையாடும்
நினைவகலாக் காட்சிபல நிறையும் எம்மூர்
நிம்மதிக்கோர் நல்ல இடம் நெஞ்சில் வைப்போம்.

## என்னாலே...

குலைகொடுத்தேன் உங்கள் கொடும்பசியைத் தீர்ப்பதற்கு
இலை கொடுத்தேன் உங்கள் இல்லங்களை வேய்வதற்கு
விலையுள்ள பொருள்பலவும் விரும்பிக கொடுத்தேனும்
விலைக் கென்னை விற்பதற்கு வீழ்த்துவது மேனாமோ?

இனித்த பனங்கள் இன்புடனே ஈய்ந்திடினும்
கனியும், கள்ளும் கற்கண்டும் கருப்பட்டிப்
புனிதப் பொருளாகப் பூரிப்பாய் நானீய்ந்தும்
மனிதரே என்னில் மனமிரங்கீர் ஏனாமோ?

பேய்க்காற்று வீசிடினும் பெயர்ந்து சரிவேனோ
"ஊய்" என்று குரல்எழுப்பி உமைஎன்றும் காத்திடுவேன்
பாய்கொடுத்தேன் படுத்துறங்கப் பன்னமும் [illegible]ானேன்
தோய்த்தெடுத்த கோடரியால் துண்டாடி அழிப்பதுமேன்?

கற்பக தருவென்றே கனிவாகப் பேசிடுவீர்
அற்ப குணம்படைத்தீர் அடியோடு எனைச்சரிப்பீர்
கற்றறிந்தும் நன்றியினைக் காப்பாற்ற மறந்திடுவீர்
வற்றவிட்டும் என்னுடலை வாழ்வகமு மாக்கிடுவீர்.

நிரைக்கு ஆப்பிறுக்கி நெஞ்சினையே பிளந்திடுவீர்
உரைப்பதற்கு வார்த்தையில்லை உள்ளமற்ற மானிடரை
நிரையில் மனிதரெனில் நீதி எதுவாமோ?
குரைக்கும் நாய்க்கும் குறைவில்லா நன்றியுண்டு.

ஈழத்தாயின் இலங்கு கின்ற பொற்றரையில்
வாழப் பிறந்தேன் வாழ்விக்க வைப்பதற்கே.
"மாழப்போ" என்றாலும் மனதோடு ஏற்றிடுவேன்
வாழ்வு வளம்தருமால் வண்டமிழுக் கென்னாலே.

# பூமாது ... கருவுற்று

காற்றாகிக் கடலலையாய் ஓடும் நீராய்க்
கார்முகிலாய்க் காண்பதெலாம் கதிரோன் சக்தி
பேறாகப் பூவுலகுபெற்ற தெல்லாம் நின்
பேரொளியும் தருவெம்மைச் சக்தி தானே.

சர்க்கரையின் உடல்முழுதும் கரும்பின் சாறாய்க்
கருப்பெற்று உய்வதுவும் உன்றன் சக்தி
வற்றாவின் மடிசுரக்கும் வளமும், வாழ்வும்
வான்மழையும் நின்னருளால் வழங்கும் சக்தி

பச்சரிசி பாளை தேங்காய் சிரட்டை
பயற்றரிசி, பச்சிலைகள் இஞ்சி, மஞ்சள்
இச்சையுடன் உலகுக்கே உயிரூட்டும் சக்தி
இளம்பரிதி வள்ளலாரின் இயற்கைச் சக்தி

தேன் கனிகள் தித்திக்கும் தீன்வளங்கள்
திறமான சக்திவளம் தேக்கும் களங்கள்
வான்பரிதி தேரேறி வழங்கும் சக்தி
வளமூட்டும் பூமாதின் வாழ்வுச் சக்தி

பூமித்தாய் போர்த்திருக்கும் பசுமைப் போர்வைநின்
புனிதப் போராட்டத்தின் புரட்சிக் கணைகள்
சேமித்தே வைத்திருக்கும் செழிப்புக் கலசம் இவை
சிறிதேனும் இலவாக்கும் வெறுமைக் கோலம்

கனிய எண்ணெய்க் கருவாகக்காண் கின்றசக்தி
இனிப்புவியை அழுக்காக்கி இயற்கையினை மாற்றி
தனிநிலைக்கு ஆளாக்கும்; ஏராதநின் சக்தி
புனிதமே!, இரசாயன அழுக்கடைவு இல்லாத சக்தி

பூமாது விரும்பியுனைப் புணர்ந்ததினால் கருவாகி
ஆமாகி அடிவயிற்றை அழுத்தவெம்மை விளைவாக
ஏமாற்றாது பலகோடி ஆண்டுகள்பின் நிலமகவாய்
நாமாற்றல் பெற்றவனு நிலநெய்நின் சக்திதாமே.

# வேள்விப் பொங்கல்

பட்டாள வெடிக்குப்
பழகிப் போன
எங்கள்
பஞ்ச புலன்கள்
பட்டாசு வெடிக்குப்
பயந்து போகுமோ
எட்டும் உயரத்தில்
இருந்து பொழியும்
எஃகுக் குண்டுகள்
இன்னல் மழைகள் — இப்போ
'ஹெலி ஹொப்டர்' தும்பி
பறந்தால் உயிரைத்
துளைக்கும் குண்டுகள்
தொடர்ந்து பொழியும் — இதனால்
எங்கள் பூமித்தாயின்
புனித மண்ணில்
பொலிந்து விளைவது
தங்கத் தமிழர் — உடல்கள்
'அவர்கள்'
எங்கள் மண்ணிலேயே
உயிர் அறுத்துப்
'புதிர்' எடுக்கப்
புறப்பட்டு விட்டதனால்
சூரிய பகவானுக்குத்
தமிழர் திருநாள்
இனிமேல் ஒத்துவராது
கூரிய ஆயுதம்
குண்டுகள், தாங்கிக்
கொடுமைகள் புரியும்
'தார்மீக' பகவானுக்கே
வேள்விப் பொங்கல்
விருந்தாகட்டும்.

# தை - இருபத்தாறு

கைநழுவி வெண்கட்டி விழக் கற்பித்த
வாயாலும் நாசாலும் செந்நீர் பாயக்
மெய்துவண்டு மண்மீதே சாய்ந்தான் — எங்கள்
மேதினியிலுயர் ஆசான் சண்முகலிங்கம்
ஐயநீ மடிந்தீர்காண் கல்லூரிக்குள்
ஆறாத வேதனையில் ஆழ்த்தி எம்மை
தை இருபத்தாறு என்பத்தி ஒன்பதிலே
சங்கமித்தாய் தியாகத் தீ வேள்வி தன்னில்

தன்னியக்கத் துப்பாக்கி வேட்டொலியால் — கேள்
தகமையினை இழந்தனுவாம், யாழ் இந்து
மண்ணுலகில் மாமேரு கல்விச் செழிப்பின்
மகிமையுணர் ஆசான்கள் இருவருடலில்
மறைந்தனவாம் குண்டுயிரை மாய்க்காதளவில்
மாய்த்தனவாம், பல தடவை மாண்டனராம்
மருத்துவமனையில், செய்தி தினம் பறந்தனவாம்
மனமேங்க இதயத்தைத் தைத்த தையோ!

## முழுப்பிறை....

வடக்கில் குண்டுகள் வானம் பொழிந்தன
அவை கொழும்பிலே நிலத்தில் முளைத்தன
வடக்கில் குண்டுகள் வாங்கிய உயிர்களை
முடக்கிக் கணக்கிட்டது முழுப்பிறை என்றன.

## வைகை

*வடக்குக் கிழக்கு மண்ணின் வைகை*
*வளமாம் தமிழர் செந்நீர்ப் பாய்கை*
*இடக்கு முடக்கெலாம் எலும்புப் பதிகை*
*எண்ண முடியா திளைத்தது நம்பகை*

# பௌத்த தர்மம்

செழிப்பு நிறை இம்மண்ணை ஈரான்போல
அழித்து நிலம் நடுங்கவைத்து அவலமாக்கிப்
பொழிகின்ற குண்டுகளால் சுடுகாடாக்கும்
பழிவாங்கும் பௌத்தர் போதனையோ தர்மம்.

## மரணவாசல்கள்

கதவு ஜன்னல்கள்
விட்டுக்கு நல்ல
காற்றை வழங்குவதில்லை
விசும் குண்டு விசவாயுக்கள்
வாங்கப்படுமவை
மரண வாசல்கள்
எங்கள் மண்ணில்
கட்டடங்கள்
என்றும் தைரியமானதா
எனக் குண்டுகளாலே
முட்டாள்தனமாய்
முயன்று பார்த்து
முடிவெடுத்ததில்
எங்கள் மண்ணின்
மைந்தர்கள் மனது
எஃகையும் விடவும்
இறுக்கமானது.

## விற்பனைக் குண்டு

வானம் குண்டு பொழிவதனாலே! தமிழ்மண்
வளம் குறைந்தது, மழை இழந்ததனாலே!
வானம் பாடிகள் பறப்பதேயில்லைத் தமிழ்மண்
வாட்டும் ஊர்திகள்; நிலைப்பதனாலே!
வானம் கைக்கெட்டிய தூரத்திலுண்டே
வலிமை வான்வரிப் போர்ப்படைக் குண்டே
எங்கு பார்ப்பினும் எதிலுமே குண்டு
தங்கும் வீட்டில் தணல்கக்கும் குண்டு
மங்கு மிருட்டில் தாய்மடிமீது குண்டு
எங்கும் பொருட்கள் விற்பனைக் குண்டு

## எம்மண் முகாம்

வேயாத வீடு, விருட்சம்
ஆகாயக் கூரை
தாயகமண்ணில்
தவிக்கின்றமக்கள் இடம்
பெயர் மக்கள்
முடங்கிய கதிகாண்
முற்றிலும் வறுமை
முச்சுமுடியும் வேளை
இடம் பெயர்ந்தோர் என
இட்டனர் பெரும் பெயர்
எதனையும் வழங்க
மறுத்தது அரசு
தடைபல விதித்தது
பொருளாதாரம்
தடம் புரண்டது — நிலை
தலை கீழானது
கடல் மார்க்கமாக — உணவு
காலம் கடந்தது
கடல் வற்றும் என்றே — கொக்கு
குடல் வற்றிப் போனது
வடக்கு கிழக்கிற்கு
இடக்கு முடக்கெலாம் — அரசு
இடிகுண்டு வீசுற்று
முடக்கு வாத அரசு
மடிப்பிச்சை காட்டிற்று
மடக்கிற்று சிலதமிழர்
மனம் பல மாறிற்று
அடம் பிடியாமலே
அரசுடன் சேர்ந்திற்று
விடமுயன்றது — முதலைக்
கண்ணீரே வேறெது — தமிழர்க்கு
திடம் தருவது தமிழ் ஈழம்
மலர்வதே! மதிநுட்டமான
படைபலம் கொண்டநாம்.

## ஔவை சிலை...

அரசு பிழைத்தோர்க்கு
அறங் கூற்றமானதற்குச்
சிரசு இழந்த ஔவைசிலை
சின்னமாக மட்டுமல்ல

சிரசில்லாச் சிங்களத்துச்
சிறுமைச்சர் ஆணையிடச் — சி
கரமான நூல் நிலையம்
சீர்குலைந்த சினத்தினாலே

தமிழ் வளர்த்த ஔவை சிலை
தான் ஒடிந்து வீழ்ந்ததுவோ
தமிழ் அழித்துத் தலையழித்தால்
தா(ய)கம் போமோ தமிழருக்கு!

# கிளாலியில்...

வேற்றுப் படையினர் வேட்டுக்கள் தீர்ப்பதும்
வெட்டித் தமிழர்உடலை வீசி எறிவதும்
மாற்றி மாற்றிச் ஷெல், குண்டு அடிப்பதும்
மன்னுயிர் காக்கும் அரசின் அறநெறி

காற்றுக்கும் யார் தான் கற்றுக் கொடுத்ததோ
கவிழ்ந்த படகினால் தமிழர்கள் மாண்டதும்
நேற்றல்ல இன்றல்ல நிதமும் நடக்குது
நீதியா கிளாலியில் சிங்களர் செய்வது

# விறகுச் சுமை

விறகுக்கு இன்று சுதந்திரம் கிடைத்தது
வீதி வீதியாய் நடை பயில்கின்றது
உறவு விறகிற்கும் தீய்க்குமா யிருந்தது
உணர்வொடு விறகு உறவு கொண்டாயிற்று

சாக்குக்குள் விறகு சரணாகதி யாவதும்
சரிவரச் சாப்பிடா ஏழையின் வயிறதாய்
ஏக்குப் போக்காக எக்கல் விழுவதும்
"இல்லைப் பாருங்கோ கிழிசல்" என்பதும்

நாக்குத் தொலைத்து நடுவழி போவதும்
நம்மை நாமே ஏய்க்கும் தொழிலது
போக்கு வரத்துக் கடினம்முன் வைப்பதும்
பொல்லாப்பு விலை பெருக்கிப் பெறுவதே

அறமா மரங்களை அழித்துப் பெறுவது
ஆண்டாண்டு சூழலை வாழ்வித்த வளமது
மறந்துமா எங்கள் கண்டம் நெரிப்பது
மாற்று வழியினில் எவ்வாழ்வு நிமிரட்டும்

# பாரதம்

பாரிய ரதங்கள் — ஈழத்
தமிழர் உடல்மீது
பவனி வந்ததால்
பாரதம் எனும்பெயர்
பதித்துக் கொண்டது
சர்வதேச அரங்கில்
சனநாயகப் பேச்சு – ஈழத்
தமிழர் தலைகள்
சர்வாதிகாரப் படையால் போச்சு
பொதுநல அமைப்பு
நாடுகளுக்குப் புறப்படும்போது
எதுநலமும் சுயநலமாக
இலங்கைத் தமிழர்மீது
உயரிய ரதங்கள்
ஊர்ந்தே சென்றன.

பாரத தேசத்துப்
பண்பான பெண்வயிற்றில்
தூர தேசத்துத்
துட்டக் கருவாகச்
சூல் கொண்டு விட்டதனால்
உன் நெஞ்சில்
ஈரமே இல்லை
இலங்கைத் தமிழர்
இனத்தை அழித்தனை.
இலங்கைத் தமிழர்
இடையறாக் கண்ணீரால்
வங்கப் பேழைநிரம்பிப்
பாரதம் மூழ்கி முடியட்டும்;
வான் தரைக் குண்டுகளால்
வயிறு நிரம்பிய
வளமாம் தமிழர்க்கு
தீன் பொதியா போட்டுத்
தீராப்பழி சுமந்தாய்!
அன்னை இந்திரா
இல்லை எனும்செய்தி
இன்பத் தமிழர்
இதயமெலாம் கருக்கியது;
எங்கள் இதயமதை
எஃலிட்டுப் பிழிந்து
தங்கக் கலசத்தில்
தான் அருந்தில்
உன் நெஞ்சுக்குப்
பொங்கும் வங்கத்தால்
பொல்லாங்கு வருமுன்னமே;
இருட்டும் வேளை
எங்கள் இதயமதை
நெருடிப் பிழிந்து
அருந்தும் உனக்கு
ஆசிய சோதி
அருந்தவப் பாட்டனாய்
அமைந்ததே
ஆச்சரியம்தான்!

## சிறப்பான விழாவில்...

தமிழ் நாட்டில் புலிகள்
தடை செய்யப் படுமாம்
தமிழ் நாட்டுச் செல்வி
தம்பட்டம் கெடுமாம்
அமிழ்ந்தான உயிர்கள்
ஐம்பதின் மேலாம்
இழிவான இவரால்
இறந்தே போயினர்.
செழிப்பான மகாமகச்
சிறப்பான விழாவில்
அழிப்பதற் கென்றோ
அம்மையார் போனார்
நெழிப்பான உடலால்
நிலைமாறி வந்தாய்
புளிப்பா உனக்குப்
புலிபாடி அழிக்கும்
குளிப்பாடி மனதின்
குறைதீர்க்க நீயும்
புலியையே காட்டிப்
புகழ் சேர்க்கத்தானோ
தடைசெய்ய வேண்டும்.

## கள்ளாலே....

காலையிலே எழுந்தோடிக்
கொட்டில் நாடிக்
காலைக் கடன் முடியுமுன்பே
களத்திற் சென்றே
காலையிலே பனையேறும்
அவனைக் கூவி
காலையிலே ''புதிசேதும்
தாவே னென்பர்
கடன் சொல்லிக் குடித்தகள்ளு
வயிற்றில் துள்ளும்
இடமுள்ளவரை வயிற்றுள்
நிரப்பிப் பின்னர்
கடம் போன்ற வயிற்றைக்
காவிச் செல்வர்
தடம்போட்டு வீழ்ந்ததுவாய்த்
தாமே புரள்வர்
கள்ளுண்ட பூச்சிகளைக்
கைத்துண்டால் வடித்தபின்
உள்ளம் பூரிக்க
உவகையுடன் உறிஞ்சிடுவர்
துள்ளி விழும் பூச்சி
தடுமாறிக் கோப்பியிலே
மெள்ள விடுந்தெடுத்தாற்
களமாகும் வீடாமே
தாலியை அடகு வைப்பர்
தன்கள்ளை விரும்பிநிற்பர்
வேலி ஓரமெலாம்

விழுந்தெழும்பி நடந்திடுவர்
காலி அடுப்பினிலே
கண்ணுறங்கும் பூனையுடன்
பாலின்றிப் பதறும்
பச்சைப் பசுங் குழந்தை
அன்பு மனையாளை
அடித்துக் குளறவைப்பர்
இன்ப வார்த்தையிலா
இழிவுள்ள செயல்புரிவர்
துன்பம் நிலைக்க வைத்துத்
தூசாக வாழ்ந்திடுவர்
கன்னக் கோல் வைத்தும்
களவெடுப்பர் கள்ளாலே
தந்தை தாய் தெரியாது
தளர்ந்து நிற்பர்
சிந்தையிழந் தவர்கள்
சிரிப்புக்கு இடம் கொடுப்பர்
தொந்தி நிறைந்த கள்ளு
துள்ளி எழுந்திடவே
சந்தி சிரிக்கக்
கந்தல் துணியாவர்
நல்ல தமிழ் போகும்
நல்வாழ்வு நலிந்தோடும்
சொல்லும் பறிபோகும்
சொத் தெல்லாம் ஒழிந்தோடும்
செல்வம் சிதைந்தோடும்
சீரிய வாழ்வோடும்
நல்ல மனை யாளும்
நன் மக்கள் கள்ளோ டோடும்
அறிவு அடை பட்டு
அறியாமை நிலைத்து நிற்கும்
நெறியறுந்து வாழ்வு
நெய்யில்லா விளக்காகும்
பொறி ஐந்தும் புகழ் விட்டுப்
புண்பட்ட நெறிதாங்கும்
பறிபோகும் பதினாறும் — கள்
பரிகாசம் நிலைக்க வைக்கும்

# சமத்துவம்

சமத்துவத்தைக் காணாது தவிக்கும் நாளில்
சான்றோர்கள் இலையென்றே எண்ணத் தோன்றும்
விமர்சகர்கள் நிறைந்திட்ட இந்த நாளில்
விதிவசமாய் வேதனையில் வாடும் மக்கள்

கமத்தொழிலைச் செய்து தினம் கூலியாகக்
கண்ணியமாய் வாழ்ந்தி ருந்தும் கருணையற்றுச்
சமஉரிமை வழங்குவதற்கோ மனமு மற்ற
சாதிவெறி பிடித்தாடும் சாதி மான்கள்

பனைமரத்தின் பாளையிலே சீவிப் பெற்ற
பதநீரைப் பிளாவினிலே பருகும் போதே
அனைவருமே அவளொருத்தி பெற்ற பிள்ளை
அன்பினைப்போல் அருந்திடுவர் அனைத்தும் மறந்தே

பனைஒன்றே, பாளைஒன்றே, பிளாவும் ஒன்றே
பருகியபின் மதிமயங்கி இருக்கும் போதே
பனையே நீ இவர்களுக்குள் சாதியின்றிச்
சமத்துவத்தைப் பிளாவினிலே வளர்த்தாய் வாழி!

## உன்னாலே...

வெள்ளை எழிலுருவே விரலிடுக்கில் உன்னைப்
பள்ளிப் பெடியளுடன் பற்றிச் சுவையறிந்தேன்
கள்ளத் தனமாகக் கடைஒதுக்கில் கைப்பிடித்தேன்
விள்ளுகின்றேன் 'போ' என்று விலகாயாம் ஏனாமோ

இதழில் வைத்து இழுத்துச் சுவையறிந்தேன்
அவமானம் தாழாது என்ஆயுள் குறைப்பாமோ
இதயத்தால் வெறுக்கின்றேன் இனிமேலும் தொடமாட்டேன்
இத்தனையும் சொன்னபின்பும் எனைவிட்டேன் விலகாயோ

கன்னியுடல் போற் கைபட்டாற் றுவளுமுன்றன்
மென்னுடலை இதழிடையில் மிகமெதுவாய் வைத்துஇழுக்க
என்னே! சுவைகொடுத்தாய் ஏனுன்னில் இம்மோகம்
உன்னை மறந்துவிட்டு உயிர் வாழ்வதரிதாமே!

பணத்தைப் பறித்திடுவாய் படுகின்ற இடமெல்லாம்
குணத்தைப் பதித்ததுவாய்க் குறள்நாற்றம் கொடுத்திடுவாய்
மணத்தைச் சுவைத்தபின் மண்ணில்மலராக்கி நடைப்
பிணமாக ஆக்கிடுவாய் பின்தொடர்தல் ஏனாமோ!

விளையாட்டாய் அன்று விலைகொடுத்து வாங்கவைத்தாய்
களிப்புடனே பற்றியதால் கண்ட பயனிதுவாய்
சுளையாய் பணத்தைச் சுருட்டி எடுத்திடுவாய்
துளையுள்ள சுவாசப்பை சுமக்கவைப்பாய் உன்னாலே

# மூச்சு வேர்

புவியீர்ப்பு விசைக்குப்
பணிந்து குனியும்
மரத்து வேர்கள்
புவியில் அடிமைத்தனத்தில்
அழுந்தும் பேர்கள்
சதுப்பு நிலக்கண்டல் மரங்கள்
எதிர்த்து வேர்களைப்
புவிக்கு மேலோய்
புரட்சி செய்து முரசு அறையும்
மூச்சுவேர்கள் சமுதாய
முற்போக் காளர்கள்

## ஈயா நெஞ்சு

*வட்டில் சோறு ஊட்டுதற்கு*
*வான் நிலாவைக் காட்டினர்*
*பட்டினியால் வாடுவோரைப்*
*பார்த்தும் ஈயா நெஞ்சினர்*

# பாடசாலை புகுமுகப் பரீட்சை

புகுமுகப் பரீட்சை தேறிப்
புகமுடியா மாணவன்
தகுதியிலை என்றேகல்வி
தவிர்க்கலாமோ வீணவன்

# கைலஞ்சம்

பலகோடி கூட்டுப்புழு
பலியெடுத்து உருவாகும்
நலமான பட்டாடை
நாம்காணும் மணமகிழ்வே!
நிலையில்லா வாழ்வுக்கு
நிமலன்றாள் அபிஷேகம்
கொலையுண்ட உயிர்க்காகக்
கொடுக்கின்ற கைலஞ்சம்

## நிராசை

ஆண்குழந்தை யொன்று
பெறவென்ற ஆசை
ஆகின ஆறு
பெண்பெற்று நிராசை

## வெதும்பிய பாவை....

*விரும்பும் அழகிய*
*மணமகன் தேவை*
*வீணாய் வயதாகி*
*வெதும்பிய பாவை*

# எம் மண் வளம்

எம் மண்ணின் வளத்தை
இயன்றளவு பயன்படுத்த
நம்மிற் பல பேர்க்கு
நியாய மெனப் படவில்லை
எம் விலங்கின் உணவாக
இவற்றை யெல்லாம் ஏற்றிட்டார்
இலைக்கஞ்சி, பயறு
கொழுக்கட்டை, உழுத்தம்மா
உருண்டை மரக்கறி 'சூப்'
முட்டை அரையவியல்
முழு உணவு ஆகாதாம்
'புரொட்டீநெக்ஸ், திரிபோஷா'
'ஒட்சு, றை' போன்ற
பிற நாட்டுப் பண்டங்களே
போதுமெனக் கொள்வார்
வரட்டுக் கௌரவம் இவை
வாழ்வுக் குதவுமோ

# பாவலர்க்கேன்...

பாவலர்கள் பணமின்றிப் பட்டினியில் வாடுவராம்
கேவலமாய் அவர்வாழ்வு கதியற்று இருந்திடுமாம்
பாவலர்க்கும் பட்டினிக்கும் பண்ணிவைத்த பிணைப்பெதுவோ
காவலராம் தமிழுக்கு இப் பாவலர்கேன் இக்கெதியோ

மன்னவனைப் பாடி மணியராம் பெற்றார்கள்
இன்னும் பலபாடி எத்தனையோ பெற்றார்கள்
தன்மனதில் உதிக்கும் எண்ணக் குவியல்களை
இன்பமாய்ப் பாடும் இவர்களுக்கேன் இக்கெதியோ...

புலவர்க்கு வறுமையுண்டாம் புண்ணிய மிலவாமோ
குலத்தின் பெருமைக்குக் குடும்பத்திற் செழிப்பில்லை
பலர்முன்னே பாடிப் பரிசாகப் பெற்றதெல்லாம்
கலயத்துக் கஞ்சிக்குக் கைமாறும் வாழ்வேனோ.

கந்தல்துணி இடுப்பில் கக்கத்தில் பழங்குடையும்
அந்தம் குலவ வைக்கும் அப்பாவலர்கள் பெருஞ்சொத்தோ
இந்த நிலை வாழ்வில் இழிவுற்று இடர் பட்டால்
எந்நாளோ வாழ்வு எழில் பெற்று உயர்ந்திடுமோ

நாயகிக்குத் தூதாக நாரையை விடுத்தவரும்
வேயாத வீடும் வெறும் வயிற்று வளையும்
தூய தமிழ்பாடும் தங்கத் தமிழ்ப் புலவனெனில்
காயம் காயும் இச் சருகு வாழ்வேனோ

புலமையின் புகழ் பரப்பும் புலவர்க்கு ஏனாமோ
புலமையினால் உயர்ச்சியிலாப் புண்பட்ட இவ் வாழ்வு
புலமையினால் பூத்தெழுந்து புதுவாழ்வு பெறுவதற்கு
புலமைக்குப் புலவிட்ட புண்ணியனே விடை தருவாய்.

## "அசல் அரிசி"

அரிசி விலை இன்று அதியுயர்ந்து விட்டதனால்
பரிந் தொருவர் கால் பிடித்துப் பத்து ரூபாவுக்கு
எரிக்கும் உலையில் இடறிவிட்ட பானையினால்
எரியும் பசிவயிற்றால் ஏங்கியழுகிணையோ!

பனிக்குப் பயமில்லைப் படபட வெனப் பல்லடிக்கும்
இனியென்னே வெறும் வயிறு இரைந்து அழுவதனால்
அநுங்கும் மெயில் ஏறி ஆனையிறவும் தாண்டி
அநுராதபுரம் சென்று அசல் அரிசி வாங்கிவர

கையில் துவக்கும் கண்மூடி இருள் துணியும்
பையில் மிளகாய்த்தூளும் மையிருட்டு வேளை
மறித்துனது அரிசிப் பையைப் பறித்தனரோ
அறிவுகெடப் பசிவயிற்றால் பதறி அழுகிணையோ

அமெரிக்கன் மாவின் அருமைப் பண்டமென
விமரிசனம் செய்து வெறும் சோளம் இமிற்றேசன் மாவை
இன்றேதும் உண்டாயோ செமிக்காத அதனாலே
வயிற்றோட்டம் கொண்டு வாதை யுற்றனையோ

## தபாற்காரன்

சின்ன வயதிலென்றன் சிறுகுறும்பைப் பொறுக்காது
என்னையடக்குவதற்கு என்னன்னை கண்ட வழி
உன்னைக் காட்டி "உறையிலிடுவார்" என்றே
என்னைப் பயங்காட்ட இருந்த கருவூலம் நீ!
பள்ளிப் பருவமதில் பார்க்கின்ற போதுன்னைக்
கள்வர், கொலைஞர், காடையரைக் கைதாக்கும்
நள்ளிரவுக் காவரெறன்றேங்கிப் பயந்தோடி
துள்ளிக் குதித்தோர் நொடியில் மறைவதுண்டு
உற்றார் உறவினர் உனைச் சேர்ந்தோர்
பெற்றார், பிள்ளை பெண்டு பிறவிடத்து நண்பர்கள்
கற்றோர், மற்றோர், காதலர்கள் வரைகின்ற
பற்றுப் பல விடயப் பொதியுடனே வருவாய் நீ!
எத்தனையோ சோதனைகள் எழுதிய பின்
சித்தி பெற வேண்டும் தேவனே! என்றிருக்கப்
பத்திரிகை பகரும் பெறுபேறு நாளை வரும்
அத்தனைக்கும் உன்னை ஆவலுடன் காத்திருப்போம்
இருமனம் கலந்தால் வாழ்வு இணை நலம்
கருகிடாது வாழ்வு திரு கைகூடும் வரையும்
திருட்டாக எழுதி அனுப்பும் தித்திக்கும் மடல்கள்
தருகின்ற திருக்கையானே தரிசனம் தினம் தருவாய்
வான் கடிதம் கடற்கரையால் வந்து இங்குசேர
வாழ்க்கையிலே கண்ணீரே வாரும் நொந்து சேர
ஏன் கடிதம் எமக்குதவாப் போது என்று சோர
இயங்கு முன்றன் மணியோசை உய்க்குமிப்பாரை
கடிதங்களைப் பிரிப்பதற்குக் 'கண்ணியமாய்க்' கூட்டம்
கண்டபின்பு "பணம்" களவு எடுக்குமொருகூட்டம்
முடியரசு நியமித்த மோசக்காரக் கூட்டம்
முடிந்தவரை தமிழர் பணம் ஏப்பமிடும் கூட்டம்
பிரித்தெடுத்த வெறுங்கடிதம் கட்டுக் கட்டாக
வேறுபட்டுத் தருகின்ற சுகங்காண நாங்கள்
தரித்திரத்தால் விடுபடவே தகுதி காண வேணும்
தாங்குகின்ற செய்திதனைத் தந்திடுவாய் வாழி!

# கவிதைக் கன்னி

அந்தி மயங்கிடும் வேளைதனில் – என்
அன்பழகி முன்னே ஓடிவந்தாள்
ஆரத்தழுவிட அங்கு சென்றேன் அவள்
ஆயிரம் உருவத்தில் காட்சி தந்தாள்
இந்த மயக்கத்தில் எனை மறந்தேன் நான்
இன்பத்தின் எல்லையில் ஏறிநின்றேன்
ஈட்டியின் கூர்மையின் ஒளிக்கீற்றாய் அவள்
ஈய்ந்த சிரிப்பினில் நான் சமைந்தேன்
உன்னை எனக்கே தந்திடென்றாள் என
உள்ளம் குளிர்ந்தது நான் சிரித்தேன்
ஊமையாய் நின்ற நிலையினிலே அந்த
ஊர்வசி என்னைத் தழுவி நின்றாள்
எழிலெலாம் என்முன்னே கொட்டி நின்றால் நான்
எதுவுமே பேசாது வாளா நின்றேன்
ஏறிட்டுப் பார்வையை என்னில் விட்டாள் அவள்
ஏனோதான் மௌனமோ என்றது போல்
ஐவிரல் அவள் மீதுதவழ விட்டேன்
ஐயுறவின்றியே அணைத்துக் கொண்டாள்
ஒய்யாரமாக என் மடியினிலே அவள்
உயிருள்ள சிலையாகப் பள்ளிகொண்டாள்
ஓவியம் உயிர் பெற்றெழுந்தது போல் அவள்
ஓதினாள் காதினில் என்னென்னவோ
ஔவையின் வழியினில் வந்தவள்தான் அவள்
ஔடதம் போன்ற என் கவிதைக் கன்னி

# தமிழே!

கருவண்டாய்க் கண் சுழன்று
காந்தமென ஈர்க்குமடி
திருமுகத்தைக் கருநாகம்
தீண்டுவதாய்த் தோணும் முடி
அருகிருக்க வரும்வேளை
அந்தரத்தில் காணும் அடி
அருமருந்தாயாகுமடி உன்
அத்தனையும் அமுதமடி

தென்றலுடன் வீசுமடி
திருவுடலின் வாசமடி
அன்றலர்ந்த அல்லியடி
அழகுமலர் மென்மையடி
கன்னலமு தாகுமடி
கனியிதழின் உணர்விலடி
இன்னுமென்ன தயக்கமடி
இதயம் உன்றன் வாசமடி

சிறகொடிந்து போனாலும்
ஷெல்லடித்து வீழ்ந்தாலும்
அறமாகக் கொண்டுனது
அருகிருக்க ஆசையடி
திறமான நின்னையடி
திருவாகும் போதிலடி
உறவாகும் உணர்விலடி
உலகம் நின் காலிலடி.

## என்சொத்து

காய்ந்த உடல் தனில் காயத்தை ஆக்கிடக்
கடிந்து வடிகின்ற கடைசிச் செந்நீர்வரை
மாய்ந்து மாய்ந்து தான் மானிடன் உழைப்பது
மாறிடாத மனத்தின் வலிமையாம்
சாயும் நாள்வரை தனித்து நிமிர்வதும்
தரித்த கொள்கையில் தன்நம்பிக்கை வைரமாம்
பெற்றபிள்ளை தன்பெண்டு கொடுப்பினும்
நற்றவமாக அதை நாடுதல் இல்லையாம்
கொற்றவன்கைபடக் கொணர்வதே கோயிலாய்க்
கொள்கை வரித்ததும் பெற்ற என்தந்தையின்
பிடிவிடா நல்லறம் மற்றவர்க்கும் இது
மருந்தாகும் வாழ்வுக்காம்
கைத் தொழிற்றிறன் கைவந்த கலையினன்
மெத்தவும் பலர் புகழும் செழிப்பினன்
எத்திசை நோக்கினும் எந்தையைப் போலொரு
சொத்தில்லை பெற்றவம் பாக்கிய சாலி நாம்
நித்திய தெய்வமாய் நின்னடி போற்றுவம்

## எங்கள் தேசத்து...

வான்வரியாக இணைந்த இளைஞர்கள்
வாழும் கழுத்தினில் வன்நஞ்சுஏற்றனர்
தோள்வலியாதெனச் செய்கையிற் காட்டினர்
தொடை நடுங்கிய படையினர் மாண்டனர்
கேள் எங்கள் உரிமையை; அரசிடம் அனுப்பியோர்
கேட்டுப் பெற்ற ஓட்டையும் மறந்தனர்
நாள் வரும் வருமென நம்மையே மாற்றினர்
நாடு காக்கவே கைப்பொருள் ஏந்தினர்

தந்தையைத் தாயைப் படையினர் கொன்றனர்
தந்தையின் முன்னே தனையனைக் கொன்றனர்
பந்தபாசங்கள் ஒதுக்கித் தம் கொள்கையில்
பழந்தமிழ் மண்ணைக் காக்கவே கூடினர்
எந்தையும் தாயும் குலாவிய எம்தமிழ்
ஈழம் பிறக்கவே ஏந்தினர் ஆயுதம்
சிந்தை தெளிவில்லாச் சிங்கள அரசுக்கு
சிரசிலடித்ததாய்ச் செய்கையிற் காட்டினர்

எங்கள் தேசத்து எல்லைக்கு வைத்தகல்
எங்கள் நெஞ்சினில் ஏற்றிய அம்மிக்கல்
எங்கள் கல்விக்கு இட்டதாம் ஆப்புக்கள்
எங்கள் இளைஞர்கள் இழந்தனர் வாய்ப்புக்கள்
எங்கள் தேசத்தைக் காக்கவே புறப்பட்ட
எங்கள் தமிழ்படை நிச்சயம் ஜெயிக்குமே
எங்கள் தாகம் எமக்கென்றதோர் தமிழ்
ஈழம் அமைப்பதே இளைஞர்கள் இலட்சியம்

நாட்டை விட்டே சில இளைஞர்கள் ஓடினர்
நாலு பேரிடம் கடன்பட்டே சென்றனர்
வீட்டை விட்டே குடும்பத்தோடேகினர்
விடியும் ஈழம் பின்பு நாடுதிரும்புவர்
காட்டு வாழ்க்கையில் கைகொள்ளும் கொள்கை
கண்டு தமிழர் ஈழம் விட்டோடினர்
ஏடறியாத சிங்கப் படையினர்
எமை அழிப்பரென்றஞ்சியா ஓடினீர்

ஆண்ட தமிழினம் மீண்டும் ஆளும் நிலைவரும்
அன்னை தமிழ் ஆள அரியாசன மேறுவாள்
நீண்ட சரித்திரம் படைத்த எம் தமிழினம்
நேர்மை வழியினில் நேசித்த எம் மண்ணை
ஈண்டு அழிப்பதே ஏற்றிய கொள்கையாய்
இழிவு கொண்ட சிங்களம் பௌத்தத்தை
கூண்டு விட்டே நாம் அனுப்பும் நிலையதைக்
கொள்கையோ டேந்திய ஆயுதம் தோற்குமோ

## கள்ளிகள்

தேரைத் தோலாய்த் தன் மழலையமாயினும்
தேவை தாய்ப்பால் உணராக் கள்ளிகள்
ஊரையே மாற்றுவர் ஒரு சொட்டுத்தானும்
ஊறாதென்பர், குழந்தை உமிழாதென்பர்

வாரா நீரிலும் வளமுளதாக வளர்வோம்
வரண்ட மண்ணிலும் வாழ்ந்து நிமிர்வோம்
யாரையே மாற்றுவர் தம்முடல் வனப்பு
குறையாதிருக்க கள்ளிகள் கூறுவர் குதர்க்கம்

எம்முடற் சிராய்ப்பில் எங்கும் பாலாய் ஆறு
இரங்கிப் பாயும் இளகிய நெஞ்சங்கள்
தம்முடல் பேணும் நக்கரோ மானிடர்
தளிருடற் பெண்களே தகுந்த கள்ளிகள்

இம்மையில் யாமொரு குறைவிலாச் சிவன்கள்
இயைந்திவர் வாரா நீருக்காயினும் இரந்தோமா
இம்மியள வேனும் ஏங்கினோமன்று இனிதுவாழும்
எம் பெயர் கள்ளிகள் இந்நிலை எப்போ மாறுமோ

## எயிட்ஸ்

வாளினை உறையிலிட்டு
வாருங்கள் போருக்கென்றே
தோளிணைத் தழுவும் தோகையர்
தொடக்கிய போரின் தொனிப் பொருள்

ஆட்கொல்லி எயிட்ஸ் நோயினை
அழிப்பதற்கெடுத்த ஆயுதம்
தண்டு முற்றினால் புற்றினுள்
நாமுமிருந்துள்ளே கழிக்குமோ வெறும்
கொண்ட கோலத்தில் இளைஞர்கள்
கோடு தாண்டிய குணத்தினர்
கண்ட சேற்றினுள் கால் வைத்துக்
கழுவ முடியாதென்றும் கலங்கினர்
எம் முடலுக்குள் பெரும் படை
எதிர்த்து நோய்கிருமி அழிபடை
எம்பெருமான் படைப்பின் வெளிப்படை
இயற்கை யருளிய நன் கொடை
எம் இளைய தலைமுறை வெறிப்படை
எயிட்ஸ் எனும் கொடிய சாக்கடை
விழுந்து விரைந்து முப்படை
இறந்தழியும் நோய்ப் படை
எச்.ஐ.வி என்னும் வைரசு
எதிர்க்கும் காப்புக்கு விசமது
அகப்படாமலே நுழைவது
அழையா விருந்தென வருவது
கொச்சைப் படுத்தும் நிலையது
லிம்போசைற்ஸ் இனை அழிப்பது
எச்சிறு நோயெனும் பெயாது
எமக்கே எமனாய் வருவது
காவிகளான மானிடர் பெரும்
பாவிகளாகப் பதவி பெற்றவர்
தாவித்திரிகின்ற குவிக்குளாம்
தன் மரணம் தலையில் சுமப்பவர்
ஒவியம் வரைய நினைப்பவர்
ஓாணுவில்லாச் சுவரிவர்
கூவியழைத்துக் கொடுப்பவர்
கொடிய எயிட்சை வழங்குநர்

வீட்டுக்கு வீடு விண்கல நிலையம்
கூட்டாகச் சேர்ந்து செவ்வாயில் சாலை
பாட்டோடு தேநீர் பருகவே மீண்டும்
வீட்டுக்குத் திரும்ப மீளாதோ இளமை

கிழடுகள் நடுவே கிண்டல் செய் இளசு
பழகிடுமாப் போல் கொம்பியூட்டர் நமக்குள்
செழுமைகள் செய்யச் சிந்திக்கா தெங்கள்
அறிவுக்குப் புரியா அதிசயம் வளரும்

கற்கால மனிதக் கண்ணிய வாடை
சொற்களுளடங்காச் சொந்தமா மாடை
கற்றவர் காட்டினை அழிப்பதோ வாடை
உற்றநெம் பூமித்தாய் உரிந்தன மாடை

மூச்சுவிடுவதற்கு முன்னமே வேண்டும்
மூச்சு இரைக்க முன்னோட வேண்டும்
ஆச்சுதா ஒட்சிசன் கடைக்கு வந்தாச்சா
பேச்சது நிலைவரும் பிராணனே போச்சோ

## ஔவை யார் அணுக்கொள்கை

அணுவைத் துகள் கொளலாமெனும் கொள்கை
ஔவை அருளினள் ஆண்டு இரண்டாயிரம் முன்
துணிவுற வாழ்த்தித் திருக்குறள் வளமதைத்
துல்லியமாகத் தந்தனள் பாட்டி

அணுவைப் பிளவுற்று அசைக்கவே முடியாதென
அர்த்தமற்ற கொள்கை செய் டோல்றன்
துணிவைப் போற்றுதல் நல்லறமாகுமோ தொடங்குக
ஔவையார் அணுக் கொள்கை போற்றுவம்

# அன்னையின்...

பச்சையக் கலயத்தில்
பகலவன் ஒளியில்
மெச்சும் வகையில்
மேதினிக்கு உணவூட்டும்
இச்சை இன்றி
இரங்கும் அன்னையின்
இனிய தனங்கள்
உணவை மட்டுமல்ல
உணர்வையும் சேர
உலகுக்கு உயிரூட்டும்
ஒட்சிசன் வாயுவையும்
இணைய வழங்கும்
இலட்சியப் பாரிகள்
அறிவியல் யுகத்தின்
அதிகரித்த தொழில் நுட்பப்
பொறியியற் போக்கின்
புகைக்கரி வாயுவை
நெறியுடன் மாற்றும்
நீதி தேவதைகள்

# ஓசோன் ஓட்டை

மரமுயிராய் மரணித்தும்
மரமான பின்பு தரும்
உரம், உயிர்காக்கும்" இல்
உறங்குதற்கும் இதமாகும்
மரத்த மன மானிடரின்
மதியில்லாச் செயலாலே
தரமான சூழல் வளம்
தகுதியற்றுப் போயிடுமே
கண்ணாடி அறைவிளைவுக்
காபனீ ரொட்சைட்டால்
எண்ணற்ற பனி மலைகள்
எழும் வெம்மை யாலுருக
கண்ணான பூமி உடல்
காணாமல் போவதுவும்
எண்ணாமற் செய்ததனால்
ஏமாந்து போனோம் நாம்
ஓசோன் படைக்கு ஊறுவிளைவித்து
உல்லாச சோம்பல் உதவாத பதார்த்தம்
ஆகாயப் போர்வை ஆகின ஓட்டை
ஆபத்துப் புற ஊதாக் கதிர்களால்
தேகாரோக்கியம் சிதறின, வாழ்வு
சித்தம் கலங்கின சி. எவ். சி. யாலே
பாகான வாழ்வு பாழாகிப் போக
பாரினைக் காடே பாதுகாத்திடுமோ.

## பெற்றோல்

*இயந்திர வயிற்றில்*
*செரிப்பதில்லை நான்*
*உயர்ந்த விலையில்*
*வாங்க நேரிடும்*
*ஏழையின் இரையிலா*
*வயிற்றை எரிப்பது*
*என் தொழில்*

## அரிசி

என்னை விலைகேட்க
ஏழைகள் எத்தனிப்பதேயில்ல
முன்னைய விலையிலும்
நான் முகடுயர்ந்த இமயம்

# பிண்ணாக்கு

மாடுகளுக்காக எமை
மறுப்பண்ணியோர்
கூடுமான வரையும்
பணங்கட்டிக்
குட்டானில் சேர்க்கக்
குறியாய் இருப்பர்

## கனிய வளம்

கனிய வளங்கள்
இல்லா நிலங்கள்
கருவுற முடியா
மலட்டுப் புலங்கள்

சீனி உடலைச்
சிறிது உயர்த்திச்
சீவனம் செய்யச்
சிறைப்படுகின்றோம்

## சீனி

அருந்தும் பானங் களில்
மானமாய் இருந்தவள்
அகப்பட்டவர் கைகளில்
உடல் சுவைக்கப்படுபவள்.

# துவிச்சக்கர வண்டி

நெய்யெரி வண்டியில்
ஏறிய போதெங்கள்
உய்வை எண்ணியதில்லை
மெய்யின் உழைப்பை
மேவ முடியாததால் உங்கள்
பைகளைப் பணம்
பாராமல் போனதோ
எங்கள் பாதங்கள்
எல்லாப் போதும்
தங்கக் கைகளால்
ஔடதம் தடவி
ஆதரிப்பதேன்

## உரல், உலக்கை

முலையிற் கிடத்தி
முடமாக்கி விட்ட
சோம்பேறித் தனத்திற்கு
முகத்திரை கிழித்து
முத்திரை வழங்கும்
நம்பிக்கையின்
வலுத் தொழிற் சாலையாம்.

வல்லிரைச்சல் கேட்கும் வானமதிர்ந்துறையும்
வாழ்வழிக்கும் சுப்பசொனிக் புக்காரா வருகை
மன்றுயிரை மாய்த்து வாழ்வொழிக்கும் மாண்பு
மாரடைக்கும் மண்ணில் மரணிக்கும் பாங்கு
சின்னஞ்சிறுசுகள் சீருடையில் செல்லும் வழி
சீறிவரும் புக்காரா சிதறி உடலழிக்கும்
அன்னமின்னும் அருந்தா அரும்மழலை இன்னும்
ஆடிவரும் தொட்டிலொடு அரி ழித்துப்போக்கும்.

முணுமுணுக்கும் அரசு முத்தாய்ப்பு வைக்கும்
முழுப் புலியும் தொழிற்பேட்டை முதலீடேதானும்
அணு வேதுமின்றி அழித்தொழித்த தெங்கும்
அத்தனையும் தமிழ்மண்ணின் வாழிடங்கள் போகும்
சிணுங்குகின்ற அரசிற்கு சிறிதேனும் தெரியா
சீரழிக்கும் புக்காரா சிரசொடிக்குமென்று
தொணதொணக்கும் பௌத்தம் தொண்டு செயும்
தொல்லைவரின் பிறநாட்டில் ஆயுதங்கள் இரக்கும்.

# உழைப்பு

அழுதகண்கள் அழுக்குத் துணியும்
அழுத்தும் வேலைப் பழுவும்சேர
செழித்தவாழ்வு சீரேயில்லாச்
சின்னஞ் சிறிசு வேலைக்கமர்த்தி
உழைத்துக் குடும்ப உயர்வுகாணல்
உருப்படியாம் கொள்கையாமோ
பிழைக்கவைக்கப் பிணியகற்றாப்
பெற்றோர்க்கேனோ மழலைச் செல்வம்.
பிஞ்சு வயதில் பொறுப்புச் சுமந்து
பொல்லா வார்த்தை அடியும்பட்டு
மிஞ்சுமாமோ வாழ்வு மேன்மை
மேலோராக உயருவாரோ
ஐந்து காசு சம்பளத்தில் எசமான்
அனைத்தும்வேலை வாங்கும் வீட்டில்
நஞ்சாய் வாழ்வு நலிந்துபோகும்
நற்கல்வியில்லா குழந்தை வாழ்வு
அழுத குழந்தை இடுப்பில் இருக்கும்
அழுதழுதே குழந்தை காவும்
கொழுத்த வாழ்வுக் கொள்கையாளர்
கோணலான புத்திசாக
செழுமை சேரச் சீராய்க்கல்வி
சிறக்க வாய்ப்புச் செய்யாவிடில்
பழுத்த உடலால் பாரில் பதராய்
போலி வாழ்வுப் போக்கு ஏனோ.

## வீதி விளக்கு

நாட்டுக்கு ஏற்றிய மின் கம்பங்கள்
நமக்கே உதவிடா வீண் கம்பங்கள்
காட்டும் ஒளியினால் விம்பங்கள்
காணா விபத்தின் நியாயங்கள் — நன்
பாட்டில் மறையும் விளக்குகள் தமிழர்பண்
பாட்டில் விழுந்த நஞ்சு நெஞ்சங்கள்.

# மலைப் பால்

இல்லைப்பால் என்றே ஏங்கித் திரிவோர்க்கு
முல்லைப்பால் இற்பால் இருக்க மாப்பால்
மலைப்பால் தேடி மாய்வதென்னே — இல்லை
முப்பாலும் வாங்க முடியவா போகிறது
நப்பாசை நாளை வரும் என நாவறண்டு போகாமல்
கல்வியிலே (ல்) போனால் கவி வருமாப் போல
முல்லையிலே (ல்) போனால் வரும் அன்பால்
நல்லம்மா தந்தால் நலமான சந்துணவே
சீர்காழி தன்னில் சிறுவனுக்குச்
சிவன் அம்மை தந்து சிறப்பித்தப்பா(ல்)
பார் சிறக்க வைத்த பழங்கதையா — இல்லைப்
பட்டேரை வைத்த புத்தியப் பா(ல்).

திரௌபதை துகிலை உரிய நினைத்துத்
தோற்றுப் போனதும் மானிடம் — எதிலுமே
வெற்றிகாண் இரக்கமில்லாமலே — பூமித்
துகிலை யுரிந்த இம் மானிடம் — காட்டைத்
துவசம் செய்து தொலைத்ததேன்

# நாங்கள் மனிதர்கள்

*மண விழாவுக்கும்*
*மரணச் சடங்குக்கும்*
*மாறி மாறிச் சமுகமாகும்*
*வாடகைக் கதிரைகள்*
*முதுகில் குத்தும்*
*முகமத (இ)லிகள்*
*பதுங்கிக் கிடந்து*
*படுகுழி பறிப்பவர் — நாங்கள்*
*எது செயல் நன்று*

தீமை உணராது
பதிலுரை வழங்கும்
பக்கம் கோடும் நீதிபதிகள் —நாங்கள்
எய்யும் அம்பு
இலக்குத் தவறி
நெய்யில் விழுந்த
நிலையிலாப் பூச்சிகள்
நாட் கூலிக்கு
நாடக மேடையில் - இடை
நடுவே வந்தவர் - நிலைப்
பாட்டில் சிலுவையில்
பதிய ஆணிகள்
நீட்டி யடித்த
நேர்மை வாதிகள் — நாங்கள்
படிப்பித்தலைப்
பக்கத் தொழிலாய்ப்
பாவிப்பதில்லை
முடிந்த வரைக்கும்
முயற்சி யெடுக்கும்
முற்போக் காளர்கள் — நாங்கள்
ஒழுங்கு வரைதலில்
அடித்தல் வரைக்கும்
அநுஸ்டிப்பவர்கள்
அடியைப் போல்
யார் உதவுவர் - அவ்
வடியை வைத்தே
ஆவன செய்பவர் — நாங்கள்
அடித்தவர்க் கெதிராய்ப்
போர்க் கொடி தூக்க
அடிக்கல்லாக
அமைப்பவர் நாங்கள்
வயிற்றுப் பிழைப்புக்கு
வக்கற் றோர்கள்
உயிரைப் பிடிக்க
உதவும் தொழிலவர்கள் — நாங்கள்
எஞ்சும் உணவில்
எழில் விருந்தளிக்கும்

பஞ்சகாலப் பாரிகள் — நாங்கள்
நடுவூரில் பழுத்த
நற்கனி மரங்கள்
கனியைக் கொய்ய
வீசும் கற்களைத்
தலையில் தாங்கும்
தனித்த மரங்கள் — நாங்கள்
ஆடு நனைந்தால் — மனம்
அல்லற் படுகின்ற
ஏடுபடித்த இயையா
நரிகள் — நாங்கள்
கூடிக் கூடிக்
குறைகள் பேசித்
தேடிய சொத்தாய்த்
திருப்திப் படுபவர்
நாடி பிடித்தல்
நயம் வருமெனில்
ஓடிப் பிடித்தே
உதவும் வைத்தியர் - கடமை
செய்தால் குற்றமும்
கடமை செய்யாத குற்றமும்
மெய்யில் ஊறிய
மெழுகு வர்த்திகள் — நாங்கள்
உலகை வழிக்கு
உதவும் காந்திகள்
'நிலவுக்கு அஞ்சி
நீள் தேசம் போவதற்கு'
நிர்ப்பந்திக்கப்படுபவர் — நாங்கள்
இளந்தலை முறைக்கு
ஏணிப்படிகள் - அவர்கள்
உழக்க மட்டும்
உரித்துடைய
கப்ப லோட்டிய
காய்ந்த தமிழர்கள் — நாங்கள்
ஆற்றுவார்க்கு
ஆற்றலார்
இன்னா செய்யின்

கூற்றத்தைக்
கையால் விளித்தவராவர்
ஏந்திய கொள்கையர்
சீறின் இடைமுறிந்து
வேந்தனும் வெந்து கெடும்
என்பவற்றைக்
கோணாமலும் கேட்டுத் தெரியாமலும்
இருந்து விட்ட கிளர்ச்சி வாதிகள் — நாங்கள்
பிளந்த வாயால்
பிதற்றும் பேச்சே
அளந்த கோலாய்
அடி வாங்குபவர்
எடுத்துக்காட்டுக்களை மட்டும்
இலக்காய் எறியும்
படுசோம் பேறிகள்
இலட்சியக் கணைகளை
எய்யமறந்த
இழிச்ச வாய்கள்
கடமையைச் செய்தோம்
கட்டுண்டோ மென
விடமேறிய பண்டங்களை
வியாபாரத்திற்கு
விட்டிருப்பவர்கள் — நாங்கள்
ஆங்கோர் ஏழைக்கு
எழுத்தறிவிக்கும்
அருமை வேளையில்
ஓங்கிய கட்டிடத்தின்
ஒதுங்கிய மூலையில்
வீங்கு தோள் காட்டி
வீற்ற அரசர்கள்
மின்னல் முழக்கமாய்
மேற்கோள் காட்டும்
தன்னல மிக்க தக்கோர் — நாங்கள்
வாங்கத் தெரிந்தவர்கள்
வழியில்லார்க்கு
வாசல் சாத்தி
வடிவேற்பவர்கள்

தங்கள் நலன்களில்
ஏங்கித் திரியும்
இரவு வௌவால்கள்
வைகைப் பெருக்கில்
வலிந்து – மண்போடப்
பையச் சுமந்து
மரமனார் அடிபட்ட
கைவை பிரம்பைக்
கண்டவர் – நாங்கள்
உடையார் முன்
இல்லார் போல்
உணர்வோடு கற்க என
அடைமொழியாய்
அவன் கூற்றில்
அர்த்த மெலாம்
கண்டவர்கள் — நாங்கள்
விடையேறும் பெருமானே
விரும்பி வந்து கற்க எனில்
விதிவேறா – நடைமாறா
நற்கடனே செய்பவர்கள் — நாங்கள்
கடமைக்கு வரையறை
கூறுபவர்
செய்தக்க அல்ல
செயக் கெடும்
செய்தக்க செய்யாமையாலும்
கெடும் என
உய்ய உலகு
உவந்தளித்த
வள்ளுவம் கூறியதை
மறந்தமா மேதைகள் — நாங்கள்
இலக்குத் தவறும்
இளந் தலைமுறையை
இலக்குக்கு இட்டுச் செல்ல
இல வாக்கு முன்மரத்தை
இளமையில் அல்லது
களைய வருபவரையே

கையறுக்கும் இதனை
ஏற்க மறுக்கும்
இயையா நெஞ்சங்கள்
இவை முப்பாலமுதில்
மூழ்கிக் கிடந்த
முறையான சரக்குகள்
கலப்படமில்லாத
கண்ணிய வாக்குகள்
இவற்றைப் புரட்டிப் பார்க்கவும்
புகலவும் முடியாத
புண்ணிய வான்கள் — நாங்கள்
துன்பும் உறவரினும்
துணிந்து செயலாற்றி
இன்பம் பயக்க
எதிர்பார்த் திருப்பவர்
மெய்யுறுதி வேறு
மேன்மை பயக்காது
செய்தொழில்
உறுதியே உய்விக்கும்
இதனை உணராதிருப்பவர் — நாங்கள்
வினைத் திட்டம்
என்பது ஒருவனது
மனத்திட்பம்
மற்றயவை இல என
மதிக்கத் தெரியாதவர் — நாங்கள்
பாவமறியாத
தேவ வாக்குகளைப்
பாடஞ் செய்து
பவனி வர விடுபவர்கள்
ஆவன செய்யாது
ஆங்காங்கே
சீவனுக் கஞ்சி
சில வேளைகளில் மட்டும்
செப்புகின்றவர்கள் — நாங்கள்
வற்றும் கடல் என
வாடி இறந்த

கொக்குகள் — உறுமீன்
வரும் வருமென
ஒய்ந்து போய்ப்பின்
ஒதுங்கிக் கொண்டவர்கள் — நாங்கள்
ஆசிரியர் அறைக்கு
அறிமுகமில்லாத
அசல் வாரிசுகள்
பேசி முடித்த பிற
விடயங்களைப்
போஸ்மோட்டம்
செய்யும் புனித வைத்தியர் — நாங்கள்
நோயைப் பரப்பும்
நுண் கிருமிகள்
கதைகளுக்குக்
கால் தலை வைத்துக்
காணாதவற்றைக்
காவும் பார வண்டில்கள் — நாங்கள்
எம்மிற் சிறிய
இளய நிலை முறையைத்
தம் வயப் படுத்தத்
தகுதியில்லாதவர்
தெம்பில்லாதவர்
கண்டிப்பான முறையில்
நம்பிக்கை வையாதவர்கள் — நாங்கள்
வையப்படுபவர்
வகுப்பறையில்
வழி முறை தவறும்
வளரும் பயிர்களில்
வார்க்கும் அத்தர்கள் — எங்கள்
சோம் பேறித் தனத்தில்
சொர்க்கம் போகும்
சுதந்திர வள்ளல்கள்
படிப்புத் தவிரப்
பல் கலைகளையும்
பயன் படுத்தும்
திட்ட அமுலாக்கல்

அமைச்சர்களைத்
திருத்த முடியாதவர்
கடமையைச் செய்யும்
ஆசான்களுக்கு
கண்டிக்கும் உரிமை
கருவாய் அமையும் சங்
கடங்கள் வந்த
சமயங்களெல்லாம் — நான்
கற்பிக்காத
கண்ணிய வகுப்புகள்
சொல்லுக்குள் அடங்கும்
சொர்க்க குணங்கள்
நல்லவை யுண்டு
நம் சிறார்க்குள் — கல்வி
வல்லமை பெற்றவர்
காட்டும் குறும்புகள்
எல்லாம் தண்டனைக்கு
ஏற்றவை யன்று
கல்வியிலூக்கம்
காட்டாதவர்கள்
எல்லாச் செயலும்
இன்பம் விளையா
இது என்
பொல்லாப் பில்லாப்
பொதுவாம் கொள்கை
கல்லாச் சிறார்க்கும்
காட்டும் வாழ்க்கை
நல்வழிப்படுத்தும்
நல்ல நெஞ்சங்கள்
வல்லமை நிறைந்த
வாழ்க்கை நெறியில்
தொல்லைகள் நீங்கத்
துணை நிற்பவர் — நாங்கள்
அல்லற்படும் போது
அகன்ற ஆடையின்
கையாய் உய்விப்பவர்கள்
உத்தமர் வாழி!

# இவரைப்பற்றி...



கந்தசாமி தவமணிதாசன் நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை, வேலணை மத்திய மகா வித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் குண்டசாலை விவசாயக் கல்லூரியிலும் பயிற்சி பெற்றவர். விஞ்ஞானப் பயிற்சி பெற்ற இவர் தனது ஆசிரியப் பணியை அநுராதபுர மாவட்டத்தில் தொடங்கினார். தற்பொழுது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகி

இவரது தந்தையார் வைத்தியநாதர் கந்தசாமி மரபுவழிக்
துறையில் ஈடுபாடுடையவர். தந்தையாரின் இத்துலற இசைவு
மாகத் தவமணிதாசன் அவர்கள் சிறுவயதிலிருந்தே கவிதைத்
நாட்டங்கொண்டவரானார்.

தவமணிதாசன் அவர்கள் எழுதிய கவிதைகள் ஈழத்துச்
களில் அவ்வப்போது வெளியாகியுள்ளன. கவியரங்க மே
தன் கவிதைகளை அழுத்தமாகவும், அழகாகவும் அரங்கே
பாராட்டுப் பெற்றுவரும் ஒருவராகவும் இவர் விளங்குகின்ற

கண்டிப்பான, மிகச்சிறந்த விஞ்ஞான ஆசிரியராகப் ப
இவருடைய கவிதைகளில் விஞ்ஞானக் கருத்துக்களும் சமூக
தக் கருத்துக்களும் விரவி நிற்கக் காணலாம். ஆசிரியப்
மேலாகப் பாடப் புறவேலைகளிலும் சமூகத் தொண்டுகளிலு
நிறைந்த ஈடுபாடு உண்டு. வகுப்பறைக் கற்பித்தலிலும் செ
கற்பித்தலே சிறந்தது என்பதில் மாறாக் கருத்து உடையர்.
பிரச்சினைகளை நாசூக்காகக் கையாளும் இவர் சிறுவ
பொங்கும் பண்பு கொண்டவர்.

நல்ல பண்பாளர், பழகுதற்கு இனியர் தவமணிதாசன்

கலாநிதி காரை. செ. சுந்த

MB PRINTERS 72/25, Sri Sangaraja Mawatha,